பக்கங்கள் 26

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 22 திங்கட்கிழமை 26.05.2025 | அதிர்வு 295

## பாணந்துறையில் துப்பாக்கிச் சூடு!



பாணந்துறை, பின் வத்த பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மதுபிட்டியவில் உள்ள ஒரு துணிக்கடைக்கு அருகிலுள்ள வீட்டில்

03



### வெற்றிலைக்கேணியில் சுமந்திரன் திட்டவட்டம்

# மக்களின் காணியைச் சுவீகரிக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்

### வர்த்தமானியை உடன் வாபஸ் பெற வேண்டும்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச சட்ட உதவி

(எஸ்.நிதர்ஷன்)

"காணி சுவீகரிப்புக்காக அரசால் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானிக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம். இந்த வர்த்தமானியை அரசு வாபஸ் பெற வேண்டும் என் றும் வலியுறுத்தியுள் ளோம். அவ்வாறு இல்லா விடின் மக்கள் போராட் டங்களையும் நடத்து வோம். தமது காணி களை மக்கள் இழக்கா மல் இருப்பதற்குரிய சட்ட ஆலோசனைகளை இல வசமாக வழங்குகின் றோம்."

03

# அமைப்பாளர்களின் விலகலுக்கு தேர்தல் முறைமையே காரணம்!

### கட்சி காரணம் இல்லை என்கின்றது ஐக்கிய மக்கள் சக்தி



"ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தொகுதி அமைப்பாளர்களின் பதவி விலகல் அவர்களுக்கு ஏற்பட்ட கோபத் தில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். ஒருசில நாட்களில் அது சரியாகும். இதற்குக் கட்சி காரணம் இல்லை. தேர்தல் முறைமையே காரண மாகும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் காரி யாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர்

03




வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமிழ் மக்களின் 5,940 ஏக்கர் காணிகளை கபளீகரம் பண்ண அரசு தரப்பு எடுத்தி ருக்கும் முயற்சியை முறிய டிக்கும் நோக்கில் இலங்கை தமிழரசு கட்சியின் பின்புலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சட்டப் போராட்டத்திற்கான கலந்தாய்வு நேற்று வெற்றிலைக்கேணிப் பகுதியில் வெற்றிகரமாக முன் னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரி கின்றது.

அந்தப் பிரதேசத்தை சேர்ந்த நூற்றியைம்பதுக்கும் அதிக மான காணி உரித்தாளர்கள் அல்லது அவர்களின் உறவி னர்கள் நேற்றைய கலந்தாய் வில் பங்குபற்றுனர். ஜனாதி பதி சட்டத்தரணி சுமந்திரன் தலைமையில் சுமார் 15 சட்டத் தரணிகளும், 15 சட்ட மாண வர்களும் இந்த கலந்தாய்வில் பங்கு பற்றி கொண்டு

04



# சுவீகரிக்கப்படவுள்ள காணிகளை நேரில் பார்வையிட்டார் சுமந்திரன்

(எஸ்.ரகுதீஸ்)

வெற்றிலைக்கேணிப் பகுதியில் வர்த்தமானி மூலம் அபகரிக்கப்பட உள்ளதாக நிர்ணயம் செய்யப்பட்ட நிலப் பகுதியை அப்பகுதியை சேர்ந்த காணி உரிமையாளர்களுடன் சென்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவினர் பார்வையிட்டனர்.

வட மாகாணத்திலே 5940 ஏக்கர் நிலப்பரப்பு மூன்று மாதத்திற்குள் உரிமை கோரப்படாதவிடத்து, அவை அரச உடமையாக்கப்படும் என 23. 03.2025 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி மூலம் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதில் 3500 ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி யாழ். மாவட்டத்தின் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பகுதியாக உள்ளது.

மேற்படி பகுதியில் காணியை அபகரிப்பு செய்வதை தடுத்து நிறுத்துவதற்காக அப்பகுதியில் உள்ள காணி உரிமையாளர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கும் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வெற்றிலைக்கேணியில் உள்ள றம்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இலவச சட்ட உதவி வழங்க முன் வந்த ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர் மேற்படி பகுதியில் உள்ள அபகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட பகுதிகளை அப்பகுதி காணி உரிமையாளர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

# சளி, இருமல் காரணமாக சிகிச்சை பெற்ற இரண்டு மாத ஆண் குழந்தை உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

சளி மற்றும் இருமல் காரணமாக சிகிச்சை பெற்ற இரண்டு மாத ஆண் குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

துன்னாலை மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த எட்வேட் தனுசன் செரின் என்ற இரண்டு மாத ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை சளி மற்றும் இருமல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்



காக அனுமதிக்கப்பட்டு பின்னர் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்த நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை நெல்லியடி பொலிஸார் நெறிப்படுத்தினர்.



# தேங்காயின் விலை மீண்டும் அதிகரிப்பு

நாட்டில் நிலவும் உப்பு பற்றாக் குறைக்கு மத்தியில் தற்போது தேங்காயின் விலையும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் முன்னணி தெரிவித்துள்ளது.

இதன்படி, தேங்காய் ஒன்று 200 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுவதாக அந்த முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அவர், தற்போது சந்தையில் 245 ரூபா முதல் 250 ரூபாய் வரையில் தேங்காய் விற்பனை செய்யப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மக்களின் காணியை...

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

2025.03.28 ஆம் திகதியன்று 2430 ஆம் இலக்கத்தின் காணி நிர்ணயச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி தொடர்பில் யாழ். வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மக்களுக்கான நீதி அமைப்பால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்ட சட்ட ஆலோசனை முகாமில் கலந்துகொண்டதன் பின்னர் தமது செயற்பாடுகளை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"காணி திணைக்களத்தால் 2025.03.28 ஆம் திகதியன்று காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி தொடர்பில் மக்களுக்கான நீதி அமைப்பின் ஊடாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்த நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்தை அடையாளப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்தால் அப்பகுதியில் உள்ள காணி உரிமையாளர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் மூன்று மாத காலத்துக்குள் தமது காணிக்கான உரித்தை உறுதிப்படுத்த வேண்டும். காணி உரித்துக்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1931 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணி உரித்து தொடர்பில் காணப்பட்ட பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே இந்தச் சட்டம் இயற்றப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீண்ட இடப்பெயர்வுகள் இடம்பெற்றன. இதனால் பலர் தமது காணிக்குரிய ஆவணங்களை இழந்துள்ளனர். அதேபோல் சுனாமி அனர்த்தத்தால் பலர் தமது ஆவணங்கள் மற்றும் உரித்துக்களை இழந்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் அசாதாரண சூழல் தொடர்ந்து காணப்படுகின்ற நிலையில் மீள்குடியேற்றம் முழுமை பெறாத நிலையில், ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்தியாவில் அகதிகளாக வாழ்கின்றனர். இவ்வாறு தீர்க்கப்படாத சிக்கல்கள் காணப்படுகின்ற சூழலில் காணி நிர்ணயச் சட்டத்தை அமுல்படுத்துவது மிக மோசமானதொரு செயற்பாடு.

காணி சுவீகரிப்புக்காகப் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானிக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த வர்த்தமானியை அரசு வாபஸ் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம். அவ்வாறு இல்லாவிடின் மக்கள் போராட்டங்களையும் நடத்துவோம். தமது காணிகளை மக்கள் இழக்காமல் இருப்பதற்குரிய இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றோம்.

குறித்த ஏதேனும் காணிக்கு உரிமம் கோருபவரிடம் உள்ள ஏதேனும் ஆவணம் அந்தக் காணிக்கான சட்ட உரித்தைக் கோருவதற்குப் போதுமானதாக அமையுமா அல்லது காணப்படும் சிக்கல்களுக்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான சட்ட ஆலோசனைகளையும் வழங்குவோம். மேலதிக சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குத் தயாராகவுள்ளோம்.

இன்று (நேற்று) 20 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் தன்னிச்சையான முறையில் இலவசமாக சட்ட ஆலோசனைகளை வழங்க முன்வந்துள்ளார்கள். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சட்டபீடத்தில் கல்வி கற்கும் 15 மாணவர்கள் இந்தச் சட்ட ஆலோசனை நடவடிக்கைகளுக்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

எதிர்வரும் நாட்களில் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்குச் சட்ட ஆலோசனை நடவடிக்கைகளுக்குச் செல்வோம். 2025.03.28 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி வாபஸ் பெற வேண்டும் என்பது எமது பிரதான வலியுறுத்தலாக உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் இந்த வர்த்தமானியைப் பிரசுரித்தது பொருத்தமானதல்ல."

– என்றார்.

## தொகுதி அமைப்பாளர்களின்...

சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பட்டியல் மூலம் கட்சிக்குக் கிடைக்கப் பெற்ற ஆசனங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாகவே ஒருசில தொகுதி அமைப்பாளர்கள் பதவி விலகத் தீர்மானித்துள்ளனர். தொகுதியில் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்ட முதல் இரண்டு பேரைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கட்சி, தொகுதி அமைப்பாளர்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்திருந்தது. அதேபோன்று பெண்களை நியமிப்பது தொடர்பாகவும் சில அளவுகோல்களை வழங்கி இருந்தது. அதன் பிரகாரம் அதிகமான இடங்களில் கட்சி அவ்வாறு செயற்பட்டிருந்தது.

ஜனநாயகம் என்பது மக்களால் அதிகம் விரும்பப்படுகின்றவர்களைத் தெரிவு செய்வதாகும். என்றாலும் இந்தத் தேர்தல் முறைமையை 100 வீதம் பின்பற்றும்போது தொதி அமைப்பாளர்கள் பல்வேறு நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தொகுதி அமைப்பாளர் என்ற வகையில் அந்தப் பிரச்சினையை நானும் எதிர்கொள்கின்றேன்.

இந்தத் தேர்தல் முறைமையால் எனக்கு விருப்பமான, வினைத்திறன் மிக்க பலரைத் தெரிவு செய்துகொள்ள முடியாமல் போயிருக்கின்றது. தேர்தல் ஒன்று முடிவடைந்த பின்னர் தேசியப் பட்டியல் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்போது இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவது சாதாரணமானதாகும்.

அதனால் பதவி விலகத் தீர்மானித்திருக்கும் தொகுதி அமைப்பாளர்கள் இந்த நேரத்தில் சற்று பொறுமையாக இருக்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்து. அவர்கள் இந்தக் கட்சிக்காக ஆரம்ப காலத்தில் இருந்து பாடுபட்டவர்கள். தேர்தல் சட்டத்தில் இருக்கும் பிழையான நடவடிக்கையே இதற்குக் காரணமாகும். அதனால் இது கட்சியின் தவறு அல்ல. தொகுதி அமைப்பாளர்களின் மன ஆதங்கமும் நியாயமானதாகும்.

எனவே, தொகுதி அமைப்பாளர்களின் பதவி விலகல், அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட கோபத்தில் எடுத்த தீர்மானமாகும். அது ஒருசில நாட்களில் சரியாகும். அதனால் அது தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை."

– என்றார்.

## பாணந்துறையில்...

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை தொடர் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

9 மில்லிமீற்றர் வகை துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்தத் தொடர் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் நடந்த இடத்தில் சுமார் 10 தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் இந்தச் சம்பவத்தில எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்க் காங்கிரஸ், தமிழரசு பெரும்பான்மை பெற்ற இடங்களில் அந்தக் கட்சிகள் ஆட்சி அமைக்கப் பூரண ஆதரவு வழங்குவோம்!

## “சங்கு” கூட்டணி சத்தியம்



(கி.வசந்தன்)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி பெரும்பான்மை பெற்ற இடங்களில் அந்தக் கட்சிகள் ஆட்சி அமைக்க முழுமையான ஆதரவு வழங்குவோம் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம் பெற்ற பின்னர் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இன்று (நேற்று) இடம்பெற்றது. அடுத்த மாதம் கூடும் உள்ளூராட்சி சபைகள் தொடர்பாக ஆராய்ந்தோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் கட்சிகள் ஆட்சியமைக்க வேண்டும் என்று உறுதி யான நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் 106 ஆசனங்களை வடக்கு, கிழக்கு பகுதிகளில் பெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏனைய தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது எனவும், பல்வேறு சபைகளில் ஏனைய தமிழ்க் கட்சிகளான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் தமிழரசுக் கட்சி பெரும்பான்மை பெற்ற இடங்களில் அந்தக் கட்சிகள் ஆட்சி அமைக்க ஆதரவு வழங்குவதாகவும் தீர்மானித்துள்ளோம்.

இரண்டு தடவைகள் தமிழரசுக் கட்சி யுடன் இது தொடர்பில் பேசியுள்ளோம். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடனும் பேசியுள்ளோம். அந்த அடிப் படையை வைத்துத்தான் பேசினோம். தமிழ்க் கட்சிகளுடன்தான் நாம் பேசி யுள்ளோம். ஏனைய தேசிய கட்சிகளுக்கு ஆதரவு வழங்குவது எனத் தீர்மானம் இல்லை. ஆனால், ஆட்சி அமைக் கும் கட்சிகளுக்கு அவர்கள் ஆதரவு வழங்கினால் அது அந்தக் கட்சியின் நிலைப்பாடே ஆகும்.” – என்றார்.

# சிறைச்சாலை வைத்தியசாலையில் முன்னாள் அமைச்சர் துமிந்த அனுமதி

தங்கமுலாம் பூசப்பட்ட ரி – 56 ரக துப்பாக்கி விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவின்படி முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க வைத்திய பரிசோதனைக்காக சிறைச் சாலை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஆணையர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சொகுசு தொடர் மாடிக் குடியிருப்பு ஒன்றில் பெண்ணி டம் இருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ரி -56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன் னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க



மறியலில் வைக்குமாறு நீதிமன் றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

விவரங்களை சேகரித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

சேகரிக்கப்பட்ட தரவுகள் ஒழுங்க மைக்கப்பட்ட பின்னர் இந்த காணி உரித்தாளர்கள் மற்றும் உரிமையாளர் கள் தொடர்பில் அடுத்த கட்ட நட வடிக்கைக்கான வழிகாட்டல்கள் வழங் கப்படும் எனத் தெரிகிறது.

உரித்தாளர்கள், உரிமையாளர்கள் இருக்கின்ற காணிகளைப் பாதுகாக்கும் முறைமை குறித்தும், உரித்தாளர்கள் முன்னிலையாகாத காணிகளை அரசு சுவீகரிக்காமல் தடுப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெ டுப்பது என்பது குறித்தும் இந்த விட யங்களை இலவசமாக கையாளும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தலைமைதான மக்களுக்கான நீதி அமைப்பு அறிவிக்கும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

இதுபோன்ற சட்டக் கலந்தாய்வு நட வடிக்கைகள் இந்த வர்த்தமானி அறி வித்தல் அடங்கும் பிரதேசங்கள் தோறும் விரைவில் இடம்பெற இருப்பதாக வும் தெரிகிறது.

இது விடயத்தில் ஒருபுறம் மக்கள் போராட்டத்தையும், மறுபுறம் நீதிமன்றம் மூலம் சட்டப் போராட்டத்தையும் ஒரே சமயத்தில் முன்னெடுக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்திருப்ப தாகத் தெரிகிறது

சட்டப் போராட்டத்தை அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன் றத்தில் ஆரம்பித்து, காத்திரமாக முன் னிறுத்த வேண்டிய கட்டாயம் இருப்பது மறக்க கூடியது அல்ல.

* * *

உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவு கள் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு ஏற்படுத்திய பின்னடைவுகள் குறித்து பலரும் பலவிதமாக பேசிக் கொண்டி ருக்க, அந்தத் தேர்தலில் அடுத்த கட்ட நிலையை எடுத்த ஐக்கிய மக்கள் சக் திக்குள் பெரும் நெருக்கடி – வெடிப்பு – ஏற்பட்டு இருப்பதாக கொழும்பு வட்டா ரங்கள் கூறுகின்றன.

அதன் தலைவர் சஜித் பிரேம தாஸவை வெட்டி ஒதுக்கி விட்டு, புதிய இளம் தலைமுறை ஒன்று தனியாக மேல் எழும்ப தயாராகி வருவதாக தெரி கின்றது.

அரசியலில் நாட்டின் எதிர்க்கட் சித் தலைவர் என்ற உயர்மட்டத்தோடு எதிர்காலத்தை சஜித் பிரேமதாஸ தொலைக்கக் கூடிய ஏது நிலைகள் சூழ்ந்து வருவதாகத் தெரிகின்றது. அதன் விவரங்களை அடுத்து வரும் நாள்களில் தெரிவிக்கக் கூடியதாக இருக்கும் என்று நினைக்கிறேன். அது வரை விவரங்களுக்குப் பொறுத்துக் கொள்ளுங்கள்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாய் வால் நிமிராது!

"அநுரகுமார திஸநாயக்கவே இந் நாட்டின் கடைசி நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக இருக்க வேண்டும்." என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்க தமது விருப்பைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்குரிய சந்தர்ப்பம் உதயமாகியுள்ளது. அதனை சரிவரப் பயன்படுத்தி வழங்கிய உறுதிமொழியை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நிறைவேற்ற வேண்டும்.

"நாடாளுமன்றத்தில் அவருக்கு 159 ஆசனங்கள் உள்ளன. அதனை சரிவரப் பயன்படுத்தி அரசமைப்பு மாற்றத்தைச் செய்ய வேண்டும். அந்த மாற்றத்தின் மூலம் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் நடவடிக்கையை அநுரகுமார திஸநாயக்க முன்னெடுக்க வேண்டும்." - என அவர் கோரி இருக்கின்றார்.

கடந்த 47 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான முயற்சி நீண்ட பல காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், அது சாத்தியப்படவேயில்லை. ஆயினும், முன்னைய முயற்சிகள் இடம் பெற்ற காலத்திற்கும், தற்போதைய நிலைமைக்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு. இப்போது முதல் தடவையாக சாதகமான சூழ்நிலை வந்திருப்பது முக்கிய விடயமாகும்.

நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளாகப் பதவி வகித்தவர்களில் ஆரம்பத்தில் பதவியில் இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாஸ, டி.பி.விஜயதுங்க மற்றும் பின்னர் பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைத் தவிர ஏனைய எல்லோருமே பதவிக்கு வர முன்னர் இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை அடியோடு ஒழித்து, நாடாளுமன்றத்துக்குப் பதிலும் பொறுப்பும் கூறக் கூடிய பிரதமர் தலைமையிலான ஆட்சி முறையை மீளவும் கொண்டுவருவோம் என மக்களுக்கு வாக்குறுதி அளித்தவர்கள். பெரும்பாலும் அந்த வாக்குறுதியோடுதான் பதவிக்கு வந்தவர்கள்.

முதன் முதலில் இந்த வாக்குறுதியை அளித்து பதவிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க அரசமைப்புக் பிரகாரம் இரண்டு தடவைகள் அந்தப் பதவியை வகித்தார். ஆனால் அந்த ஆட்சி முறைமையை அவரால் ஒழிக்க முடியவில்லை.

ஒரு தடவை ஜனாதிபதி பதவியை வகித்தவுடன் அந்த முறைமையை ஒழித்து விடுவேன் என்று கூறி அதிகாரத்துக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ, அதிகாரங்களைப் பயன்படுத்தி மூன்றாம் முறையும் அந்தப் பதவியைப் பெற எத்தனித்து, அந்த முயற்சியில் தோற்றுப் போய் வெளியேறினார். பதவியில் இருந்த போது அந்த முறைமையை ஒழிக்க அவர் முயலவேயில்லை.

அதன் பின்னர் பதவிக்கு வந்த மைத்திரியும் அத்தகைய வாக்குறுதியை கொடுத்தாலும், குறைந்தபட்சம் அந்தப் பதவிக் கதிரைக்கான அதிகாரங்களைக் குறைப்பதில் ஓரளவு திருப்தியாகப் பணியாற்றினார்.

இடையில் பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க கூட, அதற்கு முன்னரான ஜனாதிபதித் தேர்தல்களின் போது நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்று சூளுரைத்தவர்தான். ஆனால் அவரும் அதைச் செய்ய எத்தனிக்கவேயில்லை.

இப்போது ஜனாதிபதியாக இருக்கும் அநுரகுமார திஸநாயக்கவும் இதே வாக்குறுதி அளித்துத்தான் பதவிக்கு வந்தார். ஆனால் முன்னைய ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் இவரது நிலைமை வேறு. நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியை மாத்திரமல்லாமல், அதை ஒழிப்பதற்கு தேவையான அரசமைப்பு மாற்றங்களை செய்வதற்கு வேண்டிய நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பங்கு பலமும் அவருக்கு ஆரம்பத்திலேயே தாராளமாக வழங்கப்பட்டிருக்கின்றது. முன்னைய ஜனாதிபதிகள் வாக்குறுதி அளித்த போதிலும், இந்தப் பலம் இல்லாத பலவீனம் காரணமாக அதனை அவர்களால் செய்ய முடியவில்லை என்று நியாயம் கூறப்படுகிறது. ஒரு வகையில் அது சரியானது. ஆனால் இப்போதைய ஜனாதிபதிக்கு அதற்கான நாடாளுமன்ற பலம், அரசியல் சூழ்நிலை, மக்கள் எதிர்பார்ப்பு எல்லாம் சாதகமாக உண்டு. ஆயினும், கடந்த ஏழு மாதங்களுக்கு மேலாக நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை வகித்து, அந்த அதிகாரத்தைச் சுவைத்ததினால் வந்த அதன் மீதான அவரது பற்று, பிடிப்பு, விருப்பு போன்றவை அதனை இலகுவில் விட்டுக் கொடுக்க அவருக்கு மனதளவில் இடம் தராது என்பதுதான் சராசரி அரசியல்வாதியின் மனநிலை. இவருடையதிலும் அதுவே தவிர்க்க முடியாததாக இருக்கும் எனத் தோன்றுகின்றது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் ‘காலைக்கதிர்’ நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

32

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?




அநுரா குமார திஸநாயக்க ஆஸ்திரேலியா சென்ற சமயம் கட்டுரையாளர் ரவீந்திரனுடன்.

நேற்றைய கட்டுரைப் பகுதியில் அனுசரணைக்காக பத்திரிகை ஆசிரியர் தேர்வு செய்து இணைத்த படங்கள் நான் விலத்திப் போகவிருந்த வாசகர்களின் சில கேள்விகளுக்கு, சிறிதளவாவது கருத்துக்கூறிப் போக வேண்டும் என்ற எண்ணத்தைச் சீண்டின.

நான் முன்கூட்டியே எடுத்த என் பார்வையில், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை ஓர் இனவாதியாகச் சித்திரிக்க முயற்சிக்கின்றேன் என்ற குற்றச்சாட்டும், அவர் நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் வல்வெட்டித்துறைக் கூட்டங்களுக்கு வந்த போது திரண்ட மக்கள் அவரை வாஞ்சையுடன் அணைத்தமை, அவரது இனபேதமற்ற மனிதத்தன்மையைக் காட்டவில்லையா என்றும், கட்டுரை அவரை இனவாதியாக பிரதிபலிக்க

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?




**ஈழத் தமிழர்களுக்கு எதிராக கனடாவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னாள் நாளை நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்டம் பற்றிய அறிவிப்பு. இலங்கையில் இனவழிப்புநடைபெற்றதுஎன்பதைஇலங்கைத் தமிழர்கள் பிரசாரப்படுத்துவதற்கு எதிராக தடைச் சட்டம் கொண்டு வருவோம் என்கிறது இலங்கை அரசு. ஆனால் இலங்கையில் இனவழிப்பு நடைபெற்றது என்பதை அடையாளப்படுத்தும் நினைவுச்சின்னம்கனடாவில்திறந்துவைக்கப்பட்டமைக்கு எதிராக கனடா வாழ் சிங்கள மக்கள் தங்கள் ஆட்சேப நடவடிக்கைகளை வெளிப்படையாக முன்னெடுக்க கனடா சட்ட ரீதியாக அனுமதித்துள்ளது.**

தொடர்ச்சி▲

முற்படுகின்றதா என்ற கேள்விக்கணைகளும் அடிக்கடி வைக்கப்பட்டன.

சுருக்கமாக, ஒருவரது நடை, உடை, பாவனை, பண்புகளில் பலர் அவர் பற்றிய தங்களது அபிப்பிராயங்களை எடுக்கலாம். அவரவர்களின் மனப்பாங்குகளை பொறுத்து அது அவர்களது உரிமை. என்னைப் பொறுத்தவரை அந்தப் பார்வையில் அப்படியான கணிப்பு இல்லை. வரலாற்று ரீதியில் அவரது கட்சியின் கொள்கைகளில், அவரது பண்புகளையும், தங்களது லட்சியத்துக்காக அவர்கள் நடத்திய அரசியல் நகர்வுகளையும் சாணக்கியத்தனங்களையும் நான் முன்வைக்கிறேன். அவ்வளவே. என்னுடைய பார்வைகள், அவருடன் பழகியதிலிருந்து அவர் ஓர் இனவாதி என முத்திரையிடத் தயங்குவேன்.

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



பிள்ளையான்

தொடர்ச்சி▲

அப்படி முத்திரையிடுவது தவறும் கூட. ஆனால் அவர் ஆழ ஊறிய சிங்கள – பௌத்த தேசியவாதி என்பதும், சிங்கள – பௌத்த மக்களின் மேலாதிக்கம் நாட்டில் கோலோச்ச வேண்டும், சிங்கக் கொடியின் கீழ் யாவரும் ஒரு நாட்டு மக்களாகத் திரட்சி பெற வேண்டும் என்பதில் உண்மைத்தனமான – அசைக்க முடியாத – நம்பிக்கையை வைத்திருப்பவர். அவர் பொதுப் பரப்புக்கு வந்த போது வயது பத்தொன்பதுதான். அந்த இளவயதில் சாதாரணமாக யாவருக்கும் வந்து போகும் சமுதாய ஏற்றப்பாடுகள் நீக்கப்பட வேண்டும் என்ற முதல்படி இடதுசாரித்தனம் அவரையும் மாணவனாகப் பீடித்திருந்தது. ஆனால் அவரை ஈர்த்து, படிப்படியாக ஜே.வி.பியுடன் இணைத்தது அவரது அசையாத சிங்கள – பௌத்த தேசிய பார்வை. இந்திய ஒப்பந்தத்தால் சிங்கள – பௌத்த நாட்டுக்கு ஆபத்து வந்துவிட்டது என்ற நிலைப்பாட்டை ஜே.வி.பி. எடுத்த போது, அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து தன்னை அர்ப்பணித்தவர் அநுரா. இந்தியா தன்னைப் பிராந்தியத்தில் பலப்படுத்துகிறது என விஜயவீரா பறைசாற்றி, அதனால் ஒப்பந்தத்தை எதிர்க்கிறோம் என நியாயம் கற்பித்தாலும், உண்மையில் அவர்கள் எதிர்த்தது நாடு பன்முகத்தன்மை கொண்டது, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள், மாகாண சபைகளின் ஊடாகத் தமிழ்ப் பகுதிகளுக்கு அதிகாரப் பரவல் வழங்க வேண்டும் என்பவற்றையே.

விஜயவீரா ஜே.வி.பியை 1971இல் உருவாக்கிய போது, தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாகக் கருதவில்லை. அவர்கள் நாட்டின் மக்கள் என்றே கருத்தெடுத்தார். 1977–இல் தமிழ் மக்களின் தேசியம் கணக்கெடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் கட்சியின் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டாலும், அது சோமவன்ஸ அமரசிங்க போன்ற கடும்போக்காளர்களால் மழுங்கடிக்கப்பட்டு, அநுரா 1989 இல் ஜே.வி.பியில் இணைந்து அந்தப் பாசறையில் வளர்ந்து, தமிழ்த் தேசியத்தை இராணுவத்தால் அழிப்பதற்குத் துணை போனவர். அந்த நாள்களில் அநுரா முதிர்ச்சி பெற்ற அரசியல்வாதியாக இருந்தவர். ஆகவே இன்று 'ஒரு நாடு – ஒரு மக்கள் – ஓர் அதிகாரம்' என்ற நல்லெண்ணத் திசைகள் எல்லாம் தமிழ் மக்கள் நாட்டில் தனி இனமாக அடையாளப்படுத்தப்பட்டாலும், அவர்கள் ஒரு தேசமாக அடையாளம் காணப்பட்டு அதற்குரிய அதிகாரங்கள் பெறப்போவதில்லை என்பது அல்ல, தாங்கள் நடத்தப் போகும் பாதையில் அதற்கு இடமில்லை என்பதுதான். தான் வரித்த கொள்கையை அவர் கடைப்பிடிக்க அவருக்கு உரிமை உண்டு. ஆனால் அதன் முன்னேற்றத்தில் வகுக்கப்படும் பாதைகளில்தான் அவரது தேசியவாதம் இன்னொரு தேசியவாதத்தை நசிக்க, அழிக்க திடசங்கற்பம் கொள்ளும் போது, தேசிய வாதத்தையும் இனவாதத்தையும் பிரிக்கும் சிறிய கோட்டில் அபிப்பிராய பேதங்கள் எழுகின்றன.

ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தில் வோய் – வுருங் (Woi - Wurrung) என்ற மொழியைப் பேசும் பழங்குடி மக்களிடையே, தாங்கள் தங்களது மக்களது வாழ்வு முறைகளையும் நிகழ்வுகளையும் கட்டுப்படுத்தக்கூடிய காத்திரமான அதிகாரம் உள்ளவாறு இருக்க வேண்டும் என்ற கருத்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தங்கதுரை



குட்டிமணி



பிரபாகரன்

தொடர்ச்சி▲

தியலை 'மரகேயில் ஸ்ரார்ரு' (Marrageil Stratoo) என்ற வார்த்தையில் விவரிப்பர். இது ஒரு வகையில் அவர்களது சுயநிர்ணய உரிமைதான். அங்குள்ள உள்ளூராட்சி சபைகள் தங்களுக்கு இடையே வாழும் பழங்குடி மக்களின் தேவைகளை அவர்களே கட்டுப் படுத்தும் முறையில் இந்த சுயநிர்ணயத்திற்கு மதிப் பளித்து தங்களது நிர்வாகத்தில் ஈடுபடுத்துவது இந்த வழமை.

ஆனால் தேசிய மக்கள் சக்தியின் பார்வையில் உள்ளூராட்சி சபைகள் கூட தங்களது அதிகாரத்தில் அமைய வேண்டும் என்ற சிந்தனையே உள்ளது. அதே பாணியில்தான் அவர்கள் தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை, அவற்றை அவர்கள் விளங்கினா லும், அதில் எதுவித நாட்டமும் இன்றி, 'ஒரு நாடு – ஒரு மக்கள் – ஓர் அதிகாரம்' என்ற கொள்கைக்குள் தள்ளிச் செல்கிறார்கள்.

தங்களது கட்சியின் மே தின ஊர்வலங்களை யும் பிரசாரக் கூட்டங்களையும் மிக ஆடம்பரத் துடனும், அலங்காரமாகவும், மக்களைக் கவரக்கூடிய விதத்திலும், அமைத்து நடத்துவது விஜயவீராவின் பாணி. தனதும், தோழர்களதும் பேச்சுக்களையும், தாங்கள் இசைக்கும் வெற்றிக் கீதங்களையும் மக்கள் கேட்டு, ஆதரவு தர வேண்டும் என்பதில் ஆர்வமாய் இருந்தவர். இவற்றைக் கேட்பதற்காகச் சேர்ந்த மக்களின் தொகையையும், அவை குறித்து வந்த ஊடகச் செய்திகளையும் அவதானித்து, அந்த மக்கள் யாவரும் தன்னோடு நிற்கிறார்கள் என அவர் நம்பினார். இதே பாணியைத்தான் தேசிய மக்கள் சக்தி வல்வெட்டித்துறையை தங்களது முக்கியமான திருப்புமுனை கூட்டமாக நிகழ்ச்சிக்குத் தேர்ந்தெடுத் தது. தமிழ் விடுதலைப் போராட்ட வரலாற்றின் பல சம்பவங்களோடும், பிரபாகரனின் நினைவுகளோடும் மட்டுமல்லாமல், குட்டிமணி, தங்கத்துரை, கிட்டு என பல விடுதலைப் போராளிகளுடனும் கூட அந்த மண் இணைந்திருந்தது. ஜே.வி.பியின் சிந்தனைவாதிகள் வல்வெட்டித்துறையைத் தேர்ந்தெடுத்ததில், அந்த இடம் விடுதலை வீரர்கள் நினைவுகள் தோய்ந்தவை என்பதற்கு அப்பால், தங்களுக்குக் கூட சிங்களப் பெரும்பான்மைக் கட்சியாக அங்கு உரித்துக்கள் இருக்கின்றன என்பதை நிலைநிறுத்த, மக்களும் அதற்காக ஆதரவாக தங்களோடு நிற்கிறார்கள் என்று காட்ட மக்களையும் சேர்த்து, அநுராவையும் அவர்களோடு பழக விட்டு, ஊடகங்களில் உலாவ விட்ட னர். மக்களுடன் செல்பிகள் எடுத்து, அரவணைப்பு களோடு அனுதாபம் காட்டிய உணர்வுகள், மக்களுக்கு அநுரா தமிழ் மக்களது அபிலாசைகளை நிறைவு செய்து தருவார் என்ற நம்பிக்கைகளை ஊட்டுவ னவாகக் காட்டி, ஊடகங்கள் மற்றும் குறும் செய்திகள் மூலமாக விடயம் பிரபலப்படுத்தப்பட்டது. ஆனால் அநுராவின் கொள்கையாக அவர் மனதிலோ அவரது கட்சியின் சிந்தனைகளிலோ என்ன குடியிருக் கின்றது என்பது சுற்றி இருந்த கூட்ட ஒழுங்குகளில் மக்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. விஜயவீரா கணக்கெடுத்தபடி திரண்ட மக்கள் கூட்டமும், அவர்கள் காட்டிய பரிவும், இந்த மக்கள் பிரிவினை என்ற கோஷத்தை மட்டுமல்ல, சமஷ்டி என்ற கோரிக்கையை யும் விட்டெறிந்து, ஒரு தேசமாக முன்னேறத் தங்க ளுக்கு ஆணை தருகிறார்கள் என அவர்களை எண்ண வைத்தன. அவர்கள் பிரசாரங்களுக்கு அவற்றை ஆதாரப்படுத்தினர்.

இன்னொரு முறையில் அவர்களது அரசியல் பாடை- தகளின் சாணக்கியத்தை பார்த்தால் பிள்ளையான் சிங்களப் பேராண்மை அரசுடன் இராணுவத்தில் ஒட்டுக் குழுவாக பணிபுரிந்தார் என்பதை நன்றாகவே அறிந்திருந்தார்கள். ஆனால் தமிழ்த் தேசியத்தை அழிக்க வேண்டும், அதனைக் கிழக்கு மாகாணத்தில் பலவீனமாக்க வேண்டும் என்ற திட்டங்கள் ராஜபக்ஷ பகுதியால் கட்டமைக்கப்பட்டபோது, பிள்ளையா னின் பின்னணிகள் தெரிந்திருந்தும், அவருக்காக பிரசாரங்கள் செய்து, அவரை வெல்ல வைப்பதிலேயே குறியாக இருந்தார்கள். கிழக்கு மாகாண சபைத் தேர் தல் பரப்புரை காலங்களில் ஜே.வி.பி. கட்சிக்கும் விமல் வீரவன்ஸவுக்கும் இடையில், அவரது ஊழல்களால் பிணக்குகள் எழுந்து, கட்சியில் இருந்து அவரை விலக் கும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்தன. ஆயி னும் அவற்றை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடியும் வரை பிற்போட்டார்கள். ஏனெனில் அவர் போன்ற பேச்சாளரையோ, சிங்கள பேரினவாதத் தைக் கவர்ந்த ஒருவரையோ தேர்தல் நடுவில் இழக்க விரும்பவில்லை. பிள்ளையானுக்கு மாகாண

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?


தொடர்ச்சி▲

முலமைச்சர் பதவியைத் தேடிக் கொடுத்துவிட்டுத்தான், விமல் வீரவன்ஸவைக் கட்சியிலிருந்து வெளியேற்றும் நெருக்குவாரங்கள் கொடுக்கப்பட்டன. அப்பொழுது பிள்ளையானைத் தெரிந்தும், தமிழ் தேசியத்தை நசுக்க அவருக்கு தரப்பட்ட பதவிகளுக்கும் சகல ஆதரவுகளுக்கும் துணை நின்றவர்கள், இன்று அவரைக் கைது செய்து, ஊழலில் பங்கெடுத்தவர், ஜோஸப் பரராஜசிங்கம் கொலைக்குக் காரணமானவர், ஈஸ்டர் குண்டு தாக்குதலில் தொடர்புடையவர் எனப் பரப்புரைகள் நடக்கின்றன.

ஜே.வி.பியின் கூட்டங்களிலும், ஊர்வலங்களிலும் இடதுசாரித்துவத்தை வலியுறுத்தி சிவப்புக் கொடிகளும் சிவப்பு சேர்ட்டுகளுமே இருந்தன. அவர்களது கூட்டங்களின் படங்களை பார்க்கும் போது இவை புரியும். நான் முன்கூறியபடி அவர் (அநுரா) தம்மளவில் மார்க்ஸ் (Marxs), ஏஞ்சல்ஸ் (Angels) போன்றோரின் ஆக்கங்களையும் இடதுசாரித் தத்துவ அறிவுகளுக்கு படித்திருந்தாலும், ரோல்சோய் (Tolstoy), காந்தியின் நூல்களிலும் காட்டிய ஆர்வம் போன்று சேகுவேராவின் வாழ்வையும் படித்தார். ஆனால் தன்னை தீவிர இடது சரியாக காட்டிக் கொள்வதில்லை. தான் நடைமுறைவாதியாகவே பார்க்கப்பட வேண்டும் என விரும்புவார். ஆதலால் தேசிய மக்கள் சக்தியின் தலைமைப் பதவியை ஏற்றபின், அவரைச் சிவப்பு உடையில் காண்பது அரிது. எங்கும் பொது நிறங்களில் நிற்கின்றார். தமிழ்ப் பிரதேசங்களிலும் அப்படியே தோன்றினார். நடைமுறைவாதியாகத் தன்னை நிலைப்படுத்தும் பண்புகளை வெளிப்படுத்துகின்றார். என்னவோ 'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்' – என்ற வள்ளுவரின் குரல் எவ்வளவையோ நினைவூட்டுகின்றது.

ஜூன் 2023 ஜனாதிபதி தேர்தலுக்கு முன் அநுரா ஆஸ்திரேலியாவுக்கு ஆதரவுகள் தேடி வந்த பொழுது அவரது கட்சி ஆதரவாளர்களுடன் சினேகபூர்வமான சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டேன். நானும் எனது இன்னுமொரு நண்பரும்தான் தமிழர்கள். அந்தச் சந்திப்பில் அநுரா புலம் பெயரில் இயங்கும் சிறு முதலாளிகளை தங்கள் தொழில்பேட்டைகளை

தொடர்ச்சி▼



முருகபூபதி

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

நாட்டிலும் ஏற்படுத்துமாறும், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழலற்ற, இணக்கமான புதிய சமுதாயமொன்று உருவாகும், அது முதலீடுகளுக்கு சாதகமானதாகும் எனக் கூறினார்.

அந்த நோக்கங்களுக்கிடையே பரவலாக அரசியல் நிலைகள் பற்றி சகஜமாகக் கலந்துரையாடினோம். அதனிடையே நான் மலேசியாவை உதாரணம் காட்டினேன். அங்கே மலாய் இனத்தவர்களுக்கு 'பூமியின் புத்திரர்கள்' என்று முதலிடம் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய எத்தனையோ மாகாணங்களில் பொருளாதாரம் சுமாராக இருந்தாலும், இந்தியர்கள் பெரும்பான்மையில் வாழும் பினாங்கு, மலாக்கா போன்ற மாகாணங்களுடன் மலேசிய மத்திய அரசு அவர்களுக்குப் பொருளாதாரத் துறைகளில் கூடிய சுதந்திரம் கொடுத்து, அவர்களது நிர்வாகங்களில் அதிகம் கெடுபிடி காட்டாமல் அவர்களை இயங்க விடுவதால் அந்த மாகாணங்கள் முன்னிலையில் நின்று, அவற்றின் வருமானங்கள் மலேசியாவின் மொத்த வருமானத்துக்கும் உதவி அளிக்கிறது, அப்படியே இலங்கையிலும் வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கும் ஒழுங்குகள் இருந்தால், புலம்பெயர் மக்களின் உதவிகளுடன் இவற்றின் வளர்ச்சி இலங்கையில் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் உதவும் எனக் கூறிய போது, அவை தாங்கள் ஆட்சியைப் பெற்றால் சிந்திக்கப்பட வேண்டியவை எனவும், ஆனால் தங்களுடைய கட்சி பொருளாதார வளர்ச்சி என்பதற்காக அப்படியான அதிகாரங்களையும் நிர்வாகங்களையும் கையளிக்கும் எனத் தாம் நம்பவில்லை, ஒரு சிறிய நாட்டில் பொருளாதாரத் திட்டங்கள் அரசின் அதிகாரத்திலேயே இருக்க வேண்டுமென அபிப்பிராயப்பட்டார். ஆனாலும் அவரை அணுகி ஆதங்கங்களோடு மனம் திறந்து பேசக்கூடியவராக தென்பட்டார். வலிகளுக்கு இன பேதம் கிடையாது, அதனைத் தான் நன்றாக அறிந்தவன் என்பதையும் விளங்கப்படுத்தினார்.

நான் ஜே.வி.பியின் காலத்தில் நடந்த வன்முறைகள் பற்றி பெருமளவில் எழுதினேன். ஆனால் தமிழ் விடுதலைக் குழுக்களின் இடையே இருந்த முரண்பாடுகளில் எழுந்தவை, முக்கியமாக தமிழ், சிங்கள மக்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய வன்முறைகளைக் குறிப்பிடவில்லை, இவை இனப்பிரச்சினைக்குத் தந்த தாக்கங்கள், அவற்றின் எதிர்வினைகளால் இனப் பிரச்சினை கூர்மை அடைந்தது என்பதை கடந்து செல்கிறேன். அவற்றையும் எழுத வேண்டும், அப்பொழுதுதான் சமநிலை ஒன்று தெரியும் என எனக்கு அறிவுரைகள் வந்தன. இந்தக் கட்டுரையில் தமிழ் விடுதலைக் குழுக்கள் நடத்திய தாக்குதல்களின் சரி, பிழைகள் பற்றி ஆராயும் நோக்கம் இல்லை. ஆனால் அவர்களது வன்முறைகள் அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கும் பயங்கரவாதப் போக்குகளுக்கும் வழிவகுத்தன என்ற கணிப்பு உண்டு. வன்முறை என்ற கருத்தில் இவை இரண்டும் ஒன்றாக இருந்தாலும், இரண்டும் பாரிய வித்தியாசமும் நோக்கமும் கொண்டவை. தங்கள் இனத்தின் விடுதலைக்காக, அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளில் இருந்து அந்த மக்களைப் பாதுகாப்பதற்காக, தமிழ் விடுதலைக் குழுக்கள் ஆயுதம் ஏந்தின, அவர்களது போராட்டம் வன்முறையாயினும், அது அவர்களின் மேல் திணிக்கப்பட்டது. அது அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கானது அல்ல. அது, அவர்களது விடுதலைக்கும், பாதுகாப்புக்கும் ஆனது. பிரபாகரனே பல தடவை தங்களது போராட்டம் சிங்கள மக்களைக் குறி வைத்தது அல்ல, அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கும் அட்டூழியங்களுக்கும் எதிராகத்தான் தாங்கள் ஆயுதங்கள் எடுத்தார்கள் எனக் கூறினார். ஆனால் தாங்கள்தான் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற அதிகாரம் தேடிய வழிகளில் அது தறி கெட்டுப் போனது. மக்களுக்கு நேர்ந்தது பெருந்துயர்.

ஜே.வி.பி. நடத்தியதோ அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக. அதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக. அதற்காக அவர்கள் தங்களது மக்களுக்கு எதிராகவே சந்தர்ப்பங்களுக்காக வன்முறையைக் கையாண்டார்கள். அந்த அரசு அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள இனப்பிரச்சினையையும் பாவித்தார்கள். அவர்களின் இனப்பிரச்சினைக்கான கொள்கைகள் எப்படி வளர்ந்தன, அவை இன்று நாட்டில் இனப்பிரச்சினையே இல்லை என்று 'ஒரு தேசியம் – ஒரு நாடு – ஒரு மக்கள் – ஓர் அதிகாரம்' என எவ்வாறு உருவெடுத்தது என்பதை பதிவதே இந்தக் கட்டுரையில் நோக்கம்.

நான் அதிக அன்பும் மதிப்பும் கொண்ட நண்பர் முருகபூபதி தான் தனது நோய் உபாதையிலும் மிகுந்த சிரமங்களுக்கிடையில் இந்தக் கட்டுரைகளை ஆர்வமாகப் படிக்கின்றார் எனவும், ஜே.வி.பியினதும் தற்போதைய தேசிய மக்கள் சக்தியினதும் திரிசங்கு நிலை பற்றிய பார்வை ஒரு தமிழ் ஈழ உணர்வாளர் என்ற ரீதியில் சொல்லப்படுவதாகவும், மேலும் தமிழ் விடுதலை குழுக்களினால் விடுதலைப் புலிகளைத் தவிர, மற்றவர்கள் தமிழ் மக்களிடையே மாற்று சிந்தனை எதுவும் கொண்டு வரவில்லை, ஆனாலும் விடுதலை புலிகளால் கூட ஜனநாயக நீரோட்டத்திற்கு வர முடியவில்லை, ஆனால் ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தியாக ஜனநாயக நீரோட்டத்திற்கும் மாற்று சிந்தனைகளில் அதிகாரத்துக்கும் வந்துள்ளது, அதில் கணிசமான ஆதரவை தமிழ் மக்களிடம் பெற்றுள்ளார்கள், அவர்கள் நாடி பிடித்து அரசியல் செய்கிறார்கள், தமிழ் கட்சிகளின் திரிசங்கு நிலைகளையும் விடுதலைக் குழுக்களில் வன்முறையையும் பதிந்தால் சமநிலை தெரியும். என நீண்ட மடல் எழுதியிருந்தார்.

உடனடியாகவே தந்த பதிலில் நான் தமிழீழ உணர்வாளர் நிலையிலிருந்து பார்க்கவில்லை சாதாரண தமிழன் என்ற பார்வையிலேயே எழுதுகிறேன் எனக் குறிப்பிட்டதும், பூபதியால் அந்தக் கூற்றைப் புரிந்து கொண்டதாகப் பதில் தரப்பட்டது.

எனது பதிலில், ஒருவர் பிரிவினை கோருவது, சில குறிப்பிட்டவரின் பொறுப்பற்ற தீர்மானம், அர்த்தமற்றது என முதல் பார்வைகளிலே முடிவுக்கு வருவதும் தப்பு, தங்களது உரிமைகள் மறுக்கப்பட்டு, அவர்களை ஒதுக்கி, பலவந்தமாக ஒன்றிப்போகவோ அன்றில் ஒருமைப்படுத்தவோ ஏற்படும் விரக்திகளில், ஒரு பலமான சிறுபான்மையினம் அந்த நிலைக்குத் தள்ளப்படும் என்பதையும் நான் நண்பர் பூபதிக்கு விளங்கப்படுத்தினேன்.

(வளரும்)



# மலையகத்தின் சிறந்த ஆளுமை

## அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 5 ஆம் ஆண்டு சிரார்த்த தினம் இன்று

- பெ.கோபிநாத்
(ஊடகப் பிரிவு - இ.தொ.கா.)

மலையகத்தின் ஆளுமைமிக்க தலைவர் – முன்னாள் அமைச்சர் – இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பொதுச்செயலாளர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 5 ஆம் ஆண்டு சிரார்த்த தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

கடந்த 5 வருடங்களுக்கு முன்பு இதுபோன்ற நாளில்தான் மலையகத்தின் ஆளுமைமிக்க தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் இவ்வுலகுக்கு விடைகொடுத்திருந்தார்.

1964 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி பிறந்த அமரர் ஆறுமுகன் தொண்டமான் கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி தன் வாழ்க்கைக்கு விடைகொடுத்து இன்றுடன் 5 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

அமரர் ஆறுமுகன் தொண்டமான் 1964 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி இந்தியாவின் புதுக்கோட்டையில் முனாபுத்தூரில் பிறந்தார்.

கொழும்பிலுள்ள ரோயல் கல்லூரி மற்றும் இந்தியாவிலுள்ள ஏர்காட்டில் மோர்க்போர்ட் பள்ளியில் அவர் கல்வி பயின்றார். பின்னர் அமெரிக்காவில் பெடிசக் பல்கலைக்கழகத்தில் கோப்றேட் மெனேஜ்மன்ட் என்ற உயர்கல்வியைக் கற்று இஸ்ரேலில் தொழிற்சங்கம் சார்ந்த கல்வியை முடித்தார்.

இவர் படிக்கும் காலத்தில் தன் தனித்துவத்தையும், அனுபவத்தையும் வைத்துக்கொண்டு தனது மக்களுக்காக தன்னால் இயன்றதை செய்யவேண்டுமென்று எண்ணிய அமரர் ஆறுமுகன் தொண்டமான் 1990 ஆம் ஆண்டு இலங்கைக்கு மீண்டும் திரும்பினார்.

இலங்கை வந்திறங்கிய அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மனதில் அரசியல் ஆர்வம் மிகையாக இருந்த தருணத்தில் சௌமியமூர்த்தி தொண்டமான் வழியில் 1990 ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து அரசியலில் தனது பணிகளைத் தொடர தனது பயணத்தை ஆரம்பித்தார்.

பின்னர் குறுகிய காலத்திலுள்ளே தனது துல்லியமான பேச்சாலும், நுணுக்கமான அறிவால் 1993 ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளராகவும், 1994 ஆம் ஆண்டு கட்சியின் பொதுச்செயலாளராகவும் பொறுப்பேற்று தனது அடுத்த கட்ட அரசியல் பயணத்தைப் பதிவு செய்தார். தொடர்ந்து அதே ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு 72 ஆயிரம் வாக்குகளைப் பெற்று மாபெரும் வெற்றிக்கண்டு தனது அரசியல் பயணத்தை நாடாளுமன்றம் நோக்கி தொடங்கினார்.

அவரது வளர்ச்சிப் பாதையை ஒருபடி மேலே உயர்த்திட அடுத்தடுத்த வெற்றிகளுக்கு, அவரது ஆதரவாளர்களும், அவரது அன்பான மக்களும் வெற்றியை மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள் என்றே குறிப்பிட வேண்டும்.

1996 ஆம் ஆண்டு 72 ரூபாவாக இருந்த தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் 100 ரூபாவாக உயர்த்துவதற்கு ஒரு வார அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது. அந்தக் கோரிக்கைக்கு அப்போதைய பெருந்தோட்டத்துறை அமைச்சர் செவிசாய்க்காத காரணத்தால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைத் துணிவோடு கொண்டுவந்ததன் மூலம் அன்றைய அரசிலே இருந்தாலும் அரசை எதிர்ப்பதற்கான துணிவை அவர் வெளிப்படுத்தினார்.

1999 ஆம் ஆண்டு அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலஞ்சென்றதன் பின்னர், அப்போதைய ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்க அம்மையாருடன் இணைந்து சிறப்பாகச் செயற்பட்டு கால்நடை வள அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சைப் பொறுப்

தொடர்ச்சி ▼

# மலையகத்தின் சிறந்த ஆளுமை

**தொடர்ச்சி ▲**

பேற்று அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் வெற்றிடத்தை திருப்திகரமாக அவர் நிறைவு செய்தார்.

2000 ஆம் ஆண்டில் தொழிற் சங்கத்தின் தலைமையை ஏற்ற அவர் தோட்டத்தொழிலாளர் களின் நாள் சம்பள அதிகரிப்புக் காக நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக 20 வீத சம்பள அதிகரிப்பை அவர் பெற்றுக்கொடுத்தார். அதே ஆண்டில் நாடாளுமன்றத் தேர்த லில் நான்கு ஆசனங்களைப் பெற்று அந்த அரசிலும் அரசை நிர்ண யிக்கும் சக்தியாக அமரர் ஆறுமுகன் தொண்டமான் விளங்கினார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தில் 17 ஆவது யாப்பு திருத்தம் முன்வைக்கப்பட்ட போது இந்திய வம்சாவளி மக்கள் தனித் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்திய வம்சாவளி பிரதிநிதி ஒருவர் அங்கம் வகிக்கும் அந்தஸ்தை அவர் நிலைநாட்டினார்.

தொடர்ந்து 2001 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு அந்த அரசில் வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சைப் பொறுப்பேற்று அரசியலில் ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சராக விளங்கினார்.

2002 ஆம் ஆண்டு மீண்டும் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு நடத்தி 111 ரூபாவாக இருந்த தோட்டத்தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை 147 ரூபாவாக உயர்த் தினார். இதனைத் தொடர்ந்து அரசு தனியார் துறைக்கு அறிவித்த சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்க ளுக்கும் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஹட்டன் – மல்லியப்பு சந்தியில் 24 நாள்கள் சத்தியாக்கிரகப் போராட் டத்தை அவர் நடத்தினார்.

இந்தப் போராட்டத்தை ஏளனமாக விமர்சித்த எதிராளிகள் இறுதியாக போராட்டத்தில் தாமும் பங்குகொள்ள முன்வந்தனர். இதன் விளைவாக போராட்டம் வெற்றிகாரமாக நிறைவு பெற்றது.

2003 ஆம் ஆண்டு இலங்கை யில் இந்திய வாம்சாவளியைச் சேர்ந்த மூன்று இலட்சத்துக்கும் அதிக மான மக்களுக்குக் குடியுரிமை யைப் பெற்றுக்கொடுப்பதில் பாரிய இன்னல்களைச் சந்தித்து அந்தக் குடியுரிமையைப் பெற்றுக்கொடுத்த பெருமை இவரையே சாரும்.

மேலும் 2003 ஆம் ஆண்டு மலையக மக்களின் பிரதான பிரச்சி னையாக அமைந்த பிரஜா வுரிமை விடயத்தை இந்திய கடவுச் சீட்டு பெற்றவர்களையும் இலங்கை பிரஜைகளாக அங்கீகரிக்கும் விசேட



சட்டமூலத்தை அரசு கொண்டு வருவதற்கு அவர் காரணமாக இருந்தார்.

2004 ஆம் ஆண்டு நடை பெற்ற நாடாளுமன்றத் தேர்த லில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார் பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட அவர் முதன்முறையாக 8 நாடாளுமன்ற அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்குக் காரணமாக இருந்தார்.

2005ஆம் ஆண்டு அமைச்ச ரின் ஆக்கபூர்வமான நடவடிக் கையால் 3179 மலையக ஆசிரியர் நியமனமும், 500 தபால் சேவை ஊழியர்களுக்கும், 200 தொடர் பாடல் உத்தியோகத்தர்களுக்குப் பதவிகளும் கிடைக்கப் பெற்றன.

2006 ஆம் ஆண்டு மீண்டும் அரசில் இணைந்த ஆறுமுகன் தொண்டமான் இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக பொருளாதார அமைச்சைப் பொறுப்பேற்று இளை ஞர்களின் எதிர்காலத்தை நவீன மயப்படுத்தும் வேலைத்திட்டங் களைத் தொண்டமான் ஞாப கார்த்த மன்ற, பிரஜாசக்தி வேலைத் திட்டத்தினூடாகச் செயற்படுத்தி வந்தார்.

2006 - 2009 வரையான நான்கு ஆண்டுகளுக்கு மாத் திரம் முழு மலையக அபிவிருத்தி பணிகளுக்காக அண்ணளவாக பாரியளவு நிதி ஒதுக்கி செலவிடப் பட்டது. அதே ஆண்டில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக முதலாளிமார் சம்மேள னத்துடன் பேச்சு நடத்தி 405 ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுத்தார்.

2010 ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு 60 ஆயிரம் வாக்குகளைப். பெற்று முதன்மையாக விளங்கினார். இதனோடு கால்நடை வள மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சும் வழங்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு மீண்டும் தோட்டத்தொழிலாளர் களின் சம்பள உயர்வு தொடர் பாக முதலாளிமார் சம்மேளனத் துடன் பேச்சு நடத்தி 515 ரூபா சம்பள உயர்வையும் பெற்றுக்கொடுத் தார்.

கல்வியியல் கல்லூரி, தொழிற் பயிற்சி நிலையங்கள், தொழில் வாய்ப்புக்கள் என இவரின் பணி கள் தொடர்ந்தன. இவரின் வழிக் காட்டலின் கீழ் அதிகமான மலை யக ஆசிரியர்கள் உருவாகியுள்ள னர்.

அமரர் ஆறுமுகன் தொண்டமான் மலையக மக்களின் நலனுக்காக கடந்த 30 ஆண்டுகளாகப் பணி யாற்றியவர். இவரது கனவு தோட்ட மக்களுக்கு 1000 ரூபா நாள் சம்பளத்தைப் பெற்றுக்கொடுப்பதும், மலையகப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதும் ஆகும். இதற் காக எத்தனையோ இன்னல்க ளுக்கு மத்தியில் அரசுடனும், தொழிற்சங்கங்களுடனும் அவர் பேச்சு நடத்தினார்.

அன்னாரின் அரசியல் வரலாற் றில் ஜாம்பவானாகவும், எதிரிக ளுக்குச் சிம்ம சொப்பனவாகவும் திகழ்ந்தார். அரசியல் மற்றுமன்றி அவரைச் சுற்றி இருப்பவர்களின் மனதைப் புரிந்துகொண்டு அன்பு காட்டுவதற்கு இவரிடம் எம் அன் னையே தோற்றுப்போய்விடு வார். அவரின் பேச்சைக் கேட்பதற் காகவே ஒரு கூட்டம் அவருக்கு இரசி கர்களாக இருந்தனர். அவர் பார்வை யிலும், அன்பான சிரிப்பிலும்தான் இந்த மலையகக் கூட்டமே அவர் பின் இருந்தது. இவ்வாறு சூழமுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ளும் இசைவாக்கத்தன்மைதான் இன்று இவரின் சகாப்தங்களாக இருக் கின்றன.

இவர் 1986 ஆம் ஆண்டு இராஜ லட்சுமியைத் திருமணம் செய்து கொண்டார். இவர் நாச்சியார் தொண்ட மான், விஜயலக்ஷ்மி தொண்டமான், தற்போதைய நாடாளுமன்ற உறுப் பினர் ஜீவன் தொண்டமான் ஆகி யோரின் பாசமிகு தந்தையாக திகழ்ந்தார்.

இவ்வாறு மக்களின் நாயகா னாக மனங்களில் வலம் வந்த அமரர் ஆறுமுகன் தொண்டமான் கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி கொழும்பு, பத்தரமுல்லையில் தனது வீட்டில் வைத்து எம்மை விட்டு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மரணமடையும் போது அவருக்கு வயது 56 ஆகும். அவர் இறக்கும்போது சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்ச ராகவும் இருந்து வந்தார்.

ஆண்டுகள் பல கடந்தாலும் அமரர் ஆறுமுகன் தொண்ட மான் அவர்கள் எம் மக்களுக் காக ஆற்றிய சேவைகள் நினைவு கூரப்படும்.





# தனது வயல் நிலங்களும் ஆக்கிரமிப்பில் என்கின்றார் திருமலை எம்.பி.குகதாசன்

(ஹஸ்பர் ஏ.எச்.)

நானும் ஒரு விவசாயி என்ற அடிப்படையில் எனது வயல் நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

– இவ்வாறு விசனத்துடன் கூறுகின்றார் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன்.

திருகோணமலையில் நேற்று மாலை இடம் பெற்ற காணி அபகரிப்புத் தொடர்பிலான இரு குறுந் திரைப்படங்களின் வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்டதன் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் ஒரு வருடத்திற்கு ஐந்து இலட்சம் மெற்றிக்தொன் அரிசி உற்பத்தி பாதிக்கப்படுகிறது. எனவே நாட்டினுடைய நன்மை கருதியும் விவசாயிகளின் நன்மை கருதியும் அரசாங்கம் காணிகளை விடுவிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் பிரதமர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றிருந்தது. நானும் கலந்து கொண்டேன். வட மாகாணத்தை மையப்படுத்தி இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது. கிழக்கு மாகாணத்தைப் பற்றிப் பேசப்படவில்லை. இருந்த போதிலும் திருகோணமலை மாவட்ட விவசாயிகளின் காணிஒ பிரச்சினைகள் தொடர்பில் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளேன்.

நானும் ஒரு விவசாயி என்ற அடிப்படையில் எனது வயல் நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

கூடிய கவனம் செலுத்தி மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க இயலுமான முயற்சிகளை மேற்கொள்வேன். 3,16,000 ஏக்கர் காணிகளை விடுவித்து விவசாயிகளின் துன்பத்தைத் துடைக்க வேண்டும். மேலும் ஐந்து இலட்சம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தியை அதிகரிக்க முயற்சிக்க வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறேன். – என்றார்.













# திருமலையில் நில ஆக்கிரமிப்பு பற்றிய இரு குறுந் திரைப்படங்கள் வெளியீடு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தின் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றமையை எடுத்து காட்டும் வாழ்வியலுடன் தொடர்புடைய "சம்பூர் மின் உற்பத்தி நிலையம் முதல் சக்தியற்ற வாழ்க்கை" மற்றும் "திரியாயின் ஆத்திக் காடு" என்ற இரு ஆவணத் திரைப்பட வெளியீடுகள் திருகோணமலை ஜுப்லி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றன.

இந்த வெளியீடுகளை அகம் மனிதாபிமான வளநிலையம் ஏற்பாடு செய்திருந்தது.

அந்தப் பகுதியில் உள்ள மக்களின் முதன்மையான சிக்கல்களை ஆவணப் படுத்தும் வகையில் இந்தத் திரைப்படங்கள் தயாரிக்கபட்டுள்ளன.

வெளியீட்டு நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் ,சமூக சிவில் செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# உயர்தரத்திற்குப் பின்னரான உயர் கல்வி வழிகாட்டல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நாளை கருத்தமர்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் அலகும் விஞ்ஞான பீட தொழில் வழிகாட்டல் அலகும் இணைந்து நடத்தும் உயர்தரத்திற்குப் பின்னரான உயர் கல்வி வழிகாட்டல் என்னும் தொனிப்பொருளினாலான செயலமர்வு ஒன்று நாளை செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு மற்றும் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கணிதத்துறை மற்றும் உயிரியல் துறை மாணவர்களுக்கான இக்கருத்துப் பகிர்வில் பல்கலைக்கழக அனுமதிக் கான விண்ணப்பங்களை சரியான முறையில் நிரப்புதல், பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் நுட்பங்கள் மற்றும் பல்கலைக்கழக வாய்ப்பினை தவறவிட்ட மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டல்கள் தொடர்பில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களினால் சிறப்பான முறையில் வழிகாட்டல்கள் இடம்பெற உள்ளன.

இலங்கையில் உள்ள அரச பல்கலைக் கழகங்களில் வேறுபட்ட துறைகளுக்கான வாய்ப்புகள், தொழில்வாண்மை சார் கற்கை நெறிகள் போன்றவை தொடர்பிலும் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இடம்பெறவுள்ளது.

பொறியியல்,உயிரியல், பௌதீக விஞ்ஞானம், கணினி விஞ்ஞானம் தொடர்பிலான வேறுபட்ட பல்கலைக்கழ கங்களில் உள்ள வாய்ப்புக்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்படவுள்ளது.

இவை தொடர்பிலான பொது அமர்வு காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும். பின்னர் 10 மணி தொடக்கம் 12 மணி வரை கணிதத் துறைக்கான வழிகாட்டல் கைலாசபதி கலையரங்கிலும், உயிரியல் துறைக்கான வழிகாட்டல் பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்திலும் இடம்பெறும்.

இந்த வழிகாட்டல் செயலமர்வில், பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருக்கும் மாணவர்களும் உயர்கல்விக் கான வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் மற்றும் உயர்தரம் பயிலும் மாணவர்களும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு விண்ணப் பங்களை சமர்ப்பித்தவர்கள், விண்ணப்ப முடிவுத்திகதியில் இருந்து இரண்டு வார காலப்பகுதிக்குள் விருப்பொழுங்கை மாற்ற முடியும். எனவே இச் செயலமர்வில் கலந்து கொள்வதன் மூலம் கற்கைநெறிகள் தொடர்பான ஆழமான விவரங்களை அறிவதன் மூலம் விருப்பொழுங்குகளில் மாற்றங்கள் செய்யும் சாத்தியம் உள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.







# ஈழத்துத் தமிழ் கலைஞர்களின் உருவாக்கத்தில் 30 இல் வெளி வருகிறது ‘தீப்பந்தம்’ திரைப்படம்

உண்மைகளையும் உணர்சிகளையும் பிரதிபலிக்கும் வண்ணம் ஈழத்துக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட முழுநீளத் திரைப்படமான தீப்பந்தம் வரும்30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கையில் பல இடங்களிலும் லண்டன், கனடா,சுவிஸ்,நோர்வே, டென்மார்க் போன்ற நாடுகளிலும்,முக்கிய திரையரங்குகளின், பெரிய திரைகளில் திரையிடப்படுகிறது.

லண்டன் AMLUS தயாரிப்பில், BLCKBOARD INTERNATIONAL படக்குழுமத்தால், இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களையே முழுக்க முழுக்க, வைத்து எடுக்கப்பட்ட படம் தீப்பந்தமாகும்.

முக்கியமான கருப்பொருளைக் கொண்டு காலத்தின் தேவைகருதி வெளிவரும் இப்படம் ஈழத்துத் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் சிறப்பான இடத்தினைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே BLCKBOARD INTERNATIONAL படக்குழுமத்தால் எடுக்கப்பட்ட ‘டக் டிக் டொஸ்’, ‘புத்தி கெட்ட மனிதன்’ ஆகிய திரைப்படங்கள் ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வெற்றிகரமாக ஓடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரவிராஜனுக்கு சர்வதேச கௌரவம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் சிங்கப்பூரிலிருந்து வெளியிடப்படும் 'ஆசிய விஞ்ஞானி' எனும் முன்னணி சஞ்சிகையின் தலைசிறந்த ஆசிய விஞ்ஞானிகள் நூறு பேரின் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்த பட்டியல் ஆசியாவிலுள்ள தலைசிறந்த விஞ்ஞானிகளின் விசேட சாதனைகளை அங்கீகரிக்கிறது. பொதுவாக இந்தப் பட்டியலில் தேர்வு செய்யப்படும் தலைசிறந்த விஞ்ஞானிகளின் ஆய்வு வெளியீட்டுக்கப்பால் தேசிய அல்லது சர்வதேச விருதை பெற்றிருக்க வேண்டும். முக்கியமான விஞ்ஞான கண்டுபிடிப்பொன்றை மேற்கொண்டிருக்க வேண்டும் அல்லது கல்விசார் அல்லது தொழில்சார் தலைமைத்துவத்தை வழங்கியிருக்க வேண்டும்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகவிஞ்ஞானப் பீடாதிபதியாக கடந்த ஐந்து ஆண்டுகளாக பணியாற்றிவரும் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் பல தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார். இவற்றில் துணைவேந்தர்கள் இயக்குநர்கள் சபையினரால் வழங்கப்பட்ட பௌதிக விஞ்ஞானத்திற்கான அதிசிறந்த இளஆராய்ச்சியாளர் விருது தேசிய விஞ்ஞான மன்றத்தினால் (National Science Foundation, NSF) வழங்கப்பட்ட இள விஞ்ஞானி விருது மற்றும் தேசிய ஆராய்ச்சி பேரவை (National Research Council, NRC) பல தடவைகள் வழங்கிய சிறந்த ஆராய்ச்சி வெளியீட்டுகளுக்கான ஜனாதிபதி விருதுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இவரின் ஆய்வுக் கட்டுரைகள் உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகளால் அதிகளவு மேற்கோளிடப்பட்டு வருகின்றன.

சர்வதேசத்தரத்திலான இவரது ஆய்வுச் செயற்பாடுகளினால் ஆசியாவின் தலைசிறந்த 100 விஞ்ஞானிகளில் ஒருவராக தெரிவாகியுள்ள சிரேஷ்ட பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்லாது யாழ் மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.




# ஆளும் கட்சி அரசியல் அதிகாரம் காணிகளைப் பந்தாடவும் அதிகாரிகளை அச்சுறுத்தவும் பிரயோகிக்கப்படக்கூடாது!

## பூநகரி சம்பவம் குறித்த வலி. கிழக்கு முன்னாள் தவிசாளர் நிரோஷ் காட்டம்




உள்ளூராட்சி மன்றங்களில் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளைத் திட்டமிட்டு திரிவுபடுத்தும் வகையில் செயற்பட்டு, மக்களை பிழையாக வழிநடத்தி, அரச உத்தியோத்தரின் தொழில் சுதந்திரத்திலும் செயற்பாடுகளிலும் தடை ஏற்படுத்தவதை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாக ராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில், அப்பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்ற நடைமுறைகளுக்கும் சட்டத்திற்கும் அமைவாக செயற்பட்டதனை திசை திருப்பும் வகையில் ஆளுங்கட்சி பிரதேச அரசியல்வாதிகள் கத்தரிக்கப்பட்ட வீடியோ பதிவு ஒன்றை தயாரித்துள்ளனர். அதனை யாழ். மாவட்ட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தனது முகப்புத்தகத்தில் வெளியிட்டுள்ளார். இது பொறுப்புமிக்க பதவியில் இருந்து கொண்டு அரச உத்தியோகத்தர்களை அச்சுறுத்தும் அடாவடித்தனமாகும்.

அடிப்படையில் இவ்விடயம் குறித்த ஆராய்கையில், ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரின் அனுசரணையில் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட அரசியல் பிரமுகர் ஒருவர் சட்ட திட்டங்களுக்கு முரணாக, பெறுமதியான வீதியோரக் காணிகளை தனக்கு தேவையானவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இதற்கு அரசாங்க ஒத்துழைப்பு காணப்பட்டுள்ளது. இங்கு மீறப்படும் உள்ளூராட்சி சட்டவிதிகள் தொடர்பில் உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் புறந்தள்ளி அரசியல் அதிகார மமதையில் அந்தத் தரப்பினர் உத்தியோகத்தர்கள் மற்றும் அச் சபையின் பொறுப்பதிகாரி, சபையின் தீர்மானங்களை தற்போது மேற்கொள்ளத்தக்க செயலாளர் மீது பலவந்தத்தினை பிரயோகித்துள்ளனர். பலவந்தத்திற்கு இடமளிக்காத உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி சட்டங்களின் அடிப்படையில் சட்டவிரோத கடைகளை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தமது காணி அபகரிப்பு நோக்கம் நிறைவேறுவதற்கு உள்ளூராட்சி மன்றம் தடையாகவுள்ள நிலையில், அங்கு பிரசன்னமாகியிருந்த உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள் மீது அவதூறு மற்றும் அச்சுறுத்தல் பிரயோகிப்புக்கள் நடைபெற்றுள்ளன. மேலும் தாக்குதல் மேற்கொள்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றினை எல்லாம் மேற்கொண்டுவிட்டு தமது வசதிக்கு ஏற்றால் போல் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கத்தரிக்கப்பட்ட வீடியோ ஒன்றை தனது முகநூலில் வெளியிட்டுள்ளார். இதனால் உள்ளூராட்சி மன்ற பணியாளர்களின் கௌரவம் மற்றும் தொழிற்சுதந்திரம் அரசாங்க அதிகாரத்தினால் மீறப்பட்டுள்ளன.

இப்படியான அரசாங்கத்தின் அரசியல் அணுகுமுறைகள் ஜனநாயக விரோதமானவை என்பதுடன் சட்டம், ஒழுங்கிற்கும் அப்பாற்பட்டவை. பிரதேச சபைகளின் உத்தியோகத்தர்களின் தொழிற்சுதந்திரத்தையும் அவர்களது உரிமைகளையும் மீறுவனவாகும். அரசியல் தலையீடுகள் இன்றி நீதியான முறையில் உத்தியோகத்தர்கள் சேவையாற்றுவதற்கான அகப் புறச் சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பள்ள அரசாங்கத் தரப்பு, சற்றேனும் அரசியல் தர்மத்திற்கு இடமளிக்காது மக்கள் விரோத நடவடிக்கைளில் ஈடுபடுவதையே இது காட்டுகின்றது. நல்லாட்சிக்கான தத்துவம் தொடர்பாக ஆளுங்கட்சி கவனம் செலுத்த வேண்டும். – என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் சுயாதீனம் அரச அதிகாரங்களால் பாதிக்கப்படும் போது அவற்றினை நாம் பார்த்திருக்க முடியாது என்றார் அவர்.

# செட்டிகுளத்தில் தமிழரசு ஆட்சி அமைப்பதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆதரவு

(கி.வசந்தன்)

செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆதரவு வழங்கும் என அதன் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாகிய ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்.

வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று மாலை இடம்பெற்ற ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் உயர் மட்டக் குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரதேச சபையைப் பொறுத்த வரை ஐக்கிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. அங்கு ஆட்சி அமைப்பதற்காக எமது ஆதரவைக் கோரியும் உள்ளது. அந்த வகையில், தமிழரசுக் கட்சியும் அங்கு ஆசனங்களைப் பெற்றுள்ளமையால் செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கான முழுமையான ஆதரவை ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி வழங்கும்.

வவுனியா மாநகரசபை அமைக்கும் விடயத்தில் சுயேச்சைக் குழுக்கள் மற்றும் ஏனைய வெற்றி பெற்ற கட்சிகளுடன்



பேச்சுக்கள் நடத்தி வருகின்றோம். தமிழரசுக் கட்சி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றுடன் மேற்கொண்ட பேச்சுக்களின் அடிப்படையில் மூன்று கட்சிகளில் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சிகள் ஆட்சி அமைப்பதற்கு உதவுவது எனத் தான் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், செட்டிகுளம் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. அதற்கு நாம் ஆட்சி அமைக்க ஆதரவு வழங்குவோம் எனத் தெரிவித்தார்.



# 1,500 தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை மிகக் குறைந்த நேரத்தில் கூறிய மூன்று வயது குழந்தை

## சாவகச்சேரியில் நேற்று சாதனை நிகழ்வு

(பிரபாகரன் டிலக்சன்)

சாவகச்சேரியைச் சேர்ந்த 3 வயது குழந்தையான தஸ்விகா 1,500 தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை குறைந்த நேரத்தில் கூறி சோழன் உலக சாதனை படைத்து, “மழலை மொழி வித்தகர்” என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெயகரன் மற்றும் டெனீகா தம்பதியரின் மூன்று வயதான மகள் தஸ்விகா, 1500 தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை குறைந்த நேரத்தில் கூறும் உலக சாதனை நிகழ்வானது சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழகத்தின் மொழிபெயர்ப்பு கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி க.கண்ணதாசனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலையத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி.இ.அபிராமியும் கலந்துகொண்டனர்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்களான இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஶ்ரீநாகவாணி ராஜா, யாழ் மாவட்டத் தலைவர் துரை பிரணவச்செல்வன் மற்றும் கிளிநொச்சி மாவட்டத் தலைவர் ராசதுரை ஜெயசுதர்சன் போன்றோர் முன்னிலையில் குழந்தையின் மொழிபெயர்ப்பு சாதனை நடைபெற்றது. குழந்தையின் முயற்சியை உன்னிப்பாக கண்காணித்த நடுவர்கள், அதை சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்தார்கள்.

சோழன் உலக சாதனை படைத்த குழந்தை தஸ்விகாவிற்கு சான்றிதழ், நினைவுக் கேடயம், அடையாள அட்டை, தங்கப்பதக்கம் என்பன வழங்கிப் பாராட்டப்பட்டது. மேலும், இச் சிறிய வயதில் அவர் கொண்டிருந்த மொழிபெயர்ப்புத் திறனை ஊக்கப்படுத்தும் விதமாக சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் சார்பாக மழலை மொழி வித்தகர் என்ற பட்டமும் சாதனைக் குழந்தைக்குச் சூட்டப்பட்டது.

# புத்தளம் விபத்தில் இருவர் காயம்



(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் – அநுராதபுரம் வீதி, சிராம்பியடி பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

காரும் ஓட்டோவும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. ஓட்டோவில் பயணித்த இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.




# மாவீரர் சங்கரின் தந்தைக்கு கம்பர்மலையில் அஞ்சலி

அண்மையில் பிரித்தானியாவில் காலமடைந்த, முதல் மாவீரர் லெப் சங்கரின் தந்தைக்கு கம்பர்மலை யில் உள்ள அவரது சொந்த இடத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை தமிழ்த் தேசிய கட்சி, தமிழ்த் தேசிய பேரவை சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் மாவீரர் லெப்டினண்ட் சங்கரின் தந்தை சின்னத்துரை செல்வச்சந்திரன் (வயது 96) கடந்த 12/05/2025 அன்று முதுமை காரணமாக பிரித்தானியாவில் காலமாகியிருந்தார்.

அவரது இறுதி அஞ்சலி நிகழ்வு பிரித்தானியாவில் இடம்பெற்றிருந்த நிலையில் கம்பர்மலையில் அவர் வாழ்ந்த வீட்டு வளாகத்தின் முன்பாக தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கம்பர்மலையில் உள்ள சங்கரின் தந்தையாரின் சொந்த வீடு அமைந்திருந்த வளாகத்தின் முன்பாக பதாகை கட்டப்பட்டு அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பின் தளபதி பண்டி தரின் தாயார் ஈகைச்சுடரினை ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்கள் அஞ்சலி செலுத்தி யிருந்தனர்.












# நீரிழிவு நோய் வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை பொது வைத்திய நிபுணர் செல்லதுரை பிரசாத் எழுதிய நீரிழிவு நோய் வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நடை பெற்றுள்ளது.

பருத்தித்துறை சூரிய மஹால் திருமண மண்டபத்தில் பொது வைத்திய நிபுணர் க.சத்திய மூர்த்தி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவை படைப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வைத்தியர் விஷ்ணு பிரசாத், உயிரியல் ஆசிரியர் சி. குணசீலன் உள்ளிட்ட வைத்தியர்கள், தாதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.









# டெங்கு, சிக்குன்குனியா பரவும் வீதம் அதிகரிப்பு

நாட்டிலுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத்தலங்களை அண்மித்த பகுதிகளில் நுளம்பு குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக அரச பூச்சியியல் அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

நிர்வாகத்தினரின் அலட்சியத்தால் நுளம்பு குடம்பிகள் பெருகும் நிலைமை அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் நஜித் சுமனசேன தெரிவித்துள்ளார்.

அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத்தலங்களை அண்மித்து டெங்கு நுளம்பு குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்துள்ளமை பூச்சியல் விஞ்ஞான அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.ம.ச. ஹொரவ்பொத்தானை தொகுதி அமைப்பாளர் அனுர புத்திக இராஜினாமா




ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரவ்பொத்தானை தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அனுர புத்திக இராஜினாமா செய்துள்ளார்.

தமது இராஜினாமா கடிதத்தை கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் கையளித்ததாக அவர் தெரிவித்தார்.

அமைப்பாளர் என்ற வகையில் தமது கடமைகளை முன்னெடுக்கும் போது கட்சியினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு இணங்க முடியாதென அனுர புத்திக்க தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே,தொடர்ந்தும்தொகுதிஅமைப்பாளர் பதவியில் தம்மால் நீடிக்க முடியாதெனவும் அவர் கூறியுள்ளார்.




# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியாகும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வட்டார மட்டத்தில் வெற்றி பெற்ற உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் அச்சீட்டுப் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் சில நாள்களுக்குள் இந்த வர்த்தமானி வெளியிடப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இதுவரை சமர்ப்பிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் இந்த வர்த்தமானியில் உள்ளடக்கப்படும் என அவர் கூறினார்.

பெண் உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களினதும் பெயர் பட்டியல் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்தார்.

பெயர்ப்பட்டியல் கிடைத்த பின்னர் மற்றுமொரு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பெயர்களை வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டார்.

# குடும்ப நலனுக்காக பா.ஜ.கவிடம் தி.மு.க. தலைமை அடைக்கலம்

## விஜய் விமர்சனம்



குடும்ப நலத்துக்காக தமிழக மானத்தை அடகு வைத்து மத்திய பா.ஜ.க. அரசிடம் தாள் பணிந்து தலைவணங்கி தி.மு.க. தலைமை அடைக்கலம் புகுந்துவிட்டது என்று தமிழக வெற்றிக் கழகம் கட்சித் தலைவர் விஜய் விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"ஊழல் செய்தவர் மீது நடவடிக்கை பாயும்போது உடனடியாக அவர் டில்லிக்கு பயணம் மேற்கொண்டால், அவர் எந்த ஊழலையும் செய்யாதவர் போல அனைத்தும் மறைக்கப்படும் என்பதை நிரூபிக்கும் வகையில் அமைச்சர்கள் பலரை தொடர்ந்து தற்போது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் டில்லி பயணம் அமைந்துள்ளது.

டாஸ்மாக் விவகாரத்தில் எங்கு பேசினால் விசாரணை தடுத்து நிறுத்தப்படுமோ, அங்கே பேசியாக வேண்டிய சூழ்நிலைக்கு தி.மு.க. அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் தள்ளப்பட்டார். அதற்கேற்றார்போல் அமைந்ததுதான் நிதி ஆயோக் கூட்டம். சென்ற ஆண்டு நடைபெற்ற கூட்டத்துக்கு செல்லாதற்கு முதல்வர் முன்வைத்த காரணங்கள் தொடர்ந்து கொண்டிருக்க இம்முறை மட்டும் ஏன் செல்ல வேண்டும்?

உண்மையிலேயே பிரதமருடனான சந்திப்பில், அமலாக்கத் துறை சோதனைகள், வழக்குகள் தொடர்பாகவும், குடும்பத்துக்காகவும் எதுவும் பேசவில்லை என்று முதல்வர் மு.க.ஸ்டாலினால் மனசாட்சியுடன் வெளிப்படையாக கூற முடியுமா?

தமிழக முதல்வர் தங்களிடம் தஞ்சம் அடையத்தான் வருகிறார் என்பது தெரிந்தும், தி.மு.கவை அரசியல் ரீதியாக கொள்கை ரீதியாக எதிர்ப்பது உண்மையெனில் பா.ஜ.கவால் எப்படி இவர்களை கொஞ்சி குலாவி வரவேற்க இயலும்? நாம் ஏற்கெனவே சொன்னது போல, இதுதான் இவர்கள் இருவருக்குள் உள்ள மறைமுக கூட்டின் வெளிப்பாடு.

நிதி ஆயோக் கூட்ட புகைப்படத்தில் பூனைக்குட்டி வெளியே வந்தது புலப்படுகிறது. முன்வரிசையில் ஒருபுறம் வெளிப்படையான கூட்டணியில் இருக்கும் சந்திரபாபு நாயுடுவும், மற்றொரு மறைமுகக் கூட்டணியான மு.க.ஸ்டாலினும் நிற்கின்றனர். தி.மு.க, பா.ஜ.க. இடையேயான மறைமுக கூட்டும், பேர அரசியலும் வெளிச்சத்துக்கு வந்துவிட்டதையே இது காட்டுகிறது.

மத்திய பா.ஜ.க. அரசின் வஞ்சிக்கும் போக்கைக் கண்டித்து, மாநில முதல்வர்கள் கூட்டத்தை புறக்கணித்த நிலையில், எதிர்க்கட்சியாக இருக்கும்போது கருப்பு பலூன் பறக்க விடுவதும், ஆளுங்கட்சியான போது கைகுலுக்கி காலில் விழுவதுமே கபட நாடக திமுக தலைமையின் பித்தலாட்ட அரசியலாக இருக்கிறது.

கூட்டத்துக்கு சென்றது மாநிலத்துக்கான நிதியை பெறுவதற்கு அல்ல. குடும்ப வாரிசு நிதியை காப்பாற்ற மட்டுமே என்பது சாமானிய மக்கள் நன்கு அறிந்ததே. குடும்ப சுயநலத்துக்காக தமிழக மானத்தை அடகு வைத்து மத்திய பா.ஜ.க. அரசிடம் தாள் பணிந்து தலைவணங்கி தி.மு.க. தலைமை அடைக்கலம் புகுந்துவிட்டது.

எதிர்வரும் தேர்தலில் மக்கள் மன்றத்தில் தோல்வி உறுதி என்பதை அறிந்த தி.மு.க, மத்தியில் ஆளும் பிளவுவாத பா.ஜ.கவுக்கு சாமரம் வீசியாவது காலத்தை ஓட்டலாம் என நினைக்கிறது. வரும் காலத்தில் பா.ஜ.கவுடன் நேரடி கூட்டணி வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்தளவுக்கு நெடுஞ்சாண்கிடையாக தி.மு.க. சரணாகதி அடைந்துள்ளது.

இந்த அவலமான தி.மு.க. அரசின் ஊழல் பெருச்சாளிகள் தமிழக மக்களால் அரசியலில் இருந்தே அப்புறப்படுத்தப்பட்டு, மக்கள் ஆதரவோடு த.வெ.க. உண்மையான மக்களாட்சியை அமைக்கும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# வெள்ளத்தில் மூழ்கிய டில்லி; விமான சேவைகள் பாதிப்பு



இந்திய தலைநகர் டில்லி மற்றும் அதனைச் சூழவுள்ள புறநகர்ப் பகுதிகளில் பெய்த கடும் மழையுடன் கூடிய பலத்த காற்று காரணமாகப் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

இரவு முழுவதும் பெய்த கடும் மழையுடனான வெள்ளப்பெருக்கு காரணமாக பாரிய மரங்கள் வேரோடு சாய்ந்தன என இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டில்லி கொண்டோன்மெண்ட் மற்றும் தீன் தயாள் ஆகிய இடங்களில் நீர் தேங்கியுள்ளதால் போக்குவரத்து பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

அத்துடன், இந்திரா காந்தி விமான நிலையத்தில் பல விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சில விமான சேவை நிறுவனங்கள் தமது சேவைகளை வழமைக்குக் கொண்டு வந்துள்ளதாக அறிவித்துள்ளன.



# இந்திய கடற்பகுதியில் லைபீரியாவின் கொள்கலன் கப்பல் கவிழ்ந்து விபத்து

இந்தியக் கடற்பகுதியில் லைபீரியாவின் கொள்கலன் கப்பல் கவிழ்ந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கொச்சி கடற்கரையிலிருந்து சுமார் 38 மைல் தொலைவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இவ்விபத்தின் போது கப்பலில் 24 பயணிகள் இருந்தனர் எனவும் அவர்களில் 9 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மீதமுள்ள பணியாளர்களை மீட்கும் பணி இடம்பெற்று வருவதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலில் 3 பேர் உயிரிழப்பு; 11 பேர் படுகாயம்

உக்ரைன் மீது நேற்று ரஷ்யா நடத்திய தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் 11 பேர் வரையில் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உக்ரைனின் கியேவ் மீது ரஷ்யா 250 ஆளில்லா விமானங்கள் மற்றும் 14 ஏவுகணைகளை ஏவியதாகவும் அவற்றில், 6 ஏவுகணைகள் மற்றும் 245 ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என உக்ரைனின் விமானப்படை தெரிவித்துள்ளது.



# அமெரிக்காவின் மௌனம் ரஷ்யாவை மேலும் ஊக்குவிக்கிறது; ஜெலன்ஸ்கி



ரஷ்யா, போரை முடிவுக்குக் கொண்டு வராமல் நீடித்துக்கொண்டே செல்வதாக உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மீது அழுத்தம் பிரயோகிக்கப்படாமல் போரை முடிவுக்குக் கொண்டு வர முடியாது.

அமெரிக்காவின் மௌனம் ரஷ்யாவை மேலும் ஊக்குவிப்பதாக உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.05.2025




இன்று தவறுகள் நேராத வண்ணம் உங்களை நீங்கள் கண்காணித்துக் கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி முறையாக கவன மாகக் கையாள வேண்டும்.

நீங்கள் இன்று பொறுமையுடனும் உறுதியுடனும் பணி களை முடிக்க வேண்டும். தவறுகள் ஏற்படா வண்ணம் தவிர்க்க கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் கலந்து பேச வேண்டும். இதன் மூலம் புறக்கணிப்பு உணர்வு தவிர்க் கப்படும். அது உங்கள் உறவை பாதிக்காமல் பார்த்துக் கொள்ள முடியும்.

உங்கள் செலவுகளை திட்டமிட்டு சிறப்பாக செலவு செய்ய வேண்டும். இதன் மூலம் இன்றைய தினம் சிறப்பாக இருக்கும்.




புதிய நபர்களின் நட்பு இன்று உங்க ளுக்கு கிடைக்கும். இது பின்னர் உங்க ளுக்கு பயனளிக்கும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள்.

உங்கள் பணிக்கு உரிய பாராட்டு கிடைக் கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடிப்பீர்கள்.

நீங்கள் இருவரும் அன்பான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவு சிறக்கும்.

பணம் அதிக அளவில் காணப்படும். பணம் செலவு செய்து அதன் விளைவில் திருப்தி அடைவீர்கள்.

பக்திப் பாடல்கள் கேட்பது பயனளிக்கும். அதன் மூலம் தேக ஆரோக்கியம் மற்றும் மன ஆரோக்கியம் பராமரிக்கலாம்.




இன்று உங்கள் அனைத்து முயற்சி களிலும் வெற்றி காண்பீர்கள். வாழ் வின் உயரத்தை எட்டுவீர்கள். உங்கள் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் விரும்பியதை அடைவீர்கள்.

நீங்கள் உங்களுக்கு கொடுத்த பணிகளை விரைவாக முடிப்பீர்கள். பணிகளை நல்ல தரத்துடன் அளிப்பீர்கள். உங்கள் திறமையின் மூலம் எளிதாக பணியாற்றுவீர்கள்.

நீங்கள் இருவரும் உறவுப் பிணைப்பை வலுப்படுத்து வீர்கள். உங்கள் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும் உங்கள் சேமிப்பை உயர்த்துவீர்கள்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். இதன் மூலம் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் இன்று பொறுமையுடன் அமைதியை கடைபிடிக்க வேண்டும். திட்டமிட்டு திறமையுடன் செயலாற்ற வேண்டியது அவசியம். புனித யாத்திரை மேற்கொள்வீர்கள்.

பணியிடத்தில் பணிச்சுமை அதிகமாக காணப்படும். பொறுமையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் உணர்வை புரிந்து கொள்ளுங்கள். அவர்ஃஅவள் தனிமையை உணராத வண்ணம் பார்த் துக் கொள்ளுங்கள். இருவரிடையே மகிழ்ச்சி நிலவ இது மிகவும் அவசியம்.

இன்று கவனமாக இல்லாவிட்டால் பணப்பற்றாக்குறை ஏற்படும். நீங்கள் சரியாக கையாண்டால் உங்கள் தேவை களை பூர்த்தி செய்துகொள்ளலாம்.




உங்கள் பொறுமை காரணமாக வெற்றி அடைவீர்கள். பொறுமை மற்றும் புத்திசாலித்தனம் பொறுத்து உங்கள் வளர்ச்சி அமையும். உங்கள் செயல் களில் கவனம் தேவை.

உறுதியும் தைரியமும் இருந்தால் இன்று வெற்றி பெறலாம். சாதாரண பணிகளை விட இன்று பணிகள் கூடுதலாக இருக்கும்.

உங்கள் துணையுடன் உறவு நல்லுறவாக அமைய அவருடைய கருத்துக்கும் மதிப்பு அளியுங்கள். அவருடன் நட்புணர்வு கொள்ளுங்கள்.

இன்று உங்கள் அதிர்ஷ்டத்தை விட திறமையில் நம் பிக்கை வேண்டும். பணபுழக்கம் சிறப்பாக இருக்காது. என்றாலும் அதனைப் பெரிதாகக் கொள்ள வேண்டாம். நிதிநிலையை மேம்படுத்த முயலுங்கள்.




நீங்கள் விரும்பியது இன்று நிறைவேறும். உங்கள் பிரார்த்தனைகள் நிறைவேறும் நீங்கள் இன்று மகிழ்ச்சி யாக உற்சாகமாக இருப்பீர்கள்.

நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விட அதிகப் பணிகளை கையாள்வீர்கள். உங்கள் மேலதிகாரிகள் உங்களின் நேர்மையைக் கண்டு உங்களைப் பாராட்டுவார்கள்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். இருவரும் இணைந்து திரைப்படம் போன்ற பொழுதுபோக்கு நிகழ்சிகளை கண்டு களிப் பீர்கள்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் திறமை காரணமாக உங்கள் சேமிப்பு பல மடங்கு உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்று செயல்களை திட்டமிட்டால் சிறப்பாக ஆற்றலாம். உங்கள் மன தில் மகிழ்ச்சி குறைந்தது போல உணர் வீர்கள். அமைதியாக இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம். சில கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும்.

இன்று கவனச் சிதைவு ஏற்படாத வகையில் பணிகளை ஆற்ற வேண்டும். உங்கள் பணிகளை அமைதியாக விடாமுயற்சியுடன் மேற்கொள்ளுங்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும். பேசி தீர்ப்பதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இதனால் பிரச்சினைகள் தீரும்.

நிதிநிலைமை சுமாராக இருக்கும். சேமிப்பு மற்றும் சிக்கனமான செலவை மேற்கொள்ள வேண்டும். இருப்ப தைக் கொண்டு வாழ்தல் அவசியம்.




இன்று நீங்கள் உற்சாகமாக ஆற்ற லுடன் செயல் பட வேண்டும். பொறுமை யாக செயல்களைக் கையாள வேண்டும். உங்கள் கூடப் பிறந்தவர்களுடன் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம்.

பணி சம்பந்தமாக இன்று பயணம் மேற்கொள்ள நேரும். பணியிடத்தில் சவால்கள் நிறைந்து காணப்படும் என்பதால் புத்திசாலித்தன மாகப் பணிகளைக் கையாள வேண்டும்.

இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். அமைதியாக இனிமையாக உங்கள் கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும்.

இன்று செலவுகள் சிறது அதிகமாக காணப்படும் என்பதால் பணத்தை கவனமாக நிர்ணயிக்க வேண்டும். சிறப்பாக திட்டமிட வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.05.2025




இன்று உங்களிடம் எதிர்மறை எண்ணங்கள் நிறைந்து காணப்படும். இதனை தவிர்த்தல் நல்ல மன நிலையுடன் காணப்படலாம். உற்சாகமுடன் இருந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

இன்று சற்று மந்தமாகச் செயல்படுவீர்கள். அதனால் பணிகளை முடிக்க தாமதமாகும் கவனமாகப் பணியாற்றினால் முன்னேற்றம் கிடைக்கும்.

சிறந்த தகவல் பரிமாற்றம் மூலம் சிறந்த பிணைப்பு உருவாகும். இதனைப் பின்பற்றுவதன் மூலம் உறவில் அன்பை வளர்க்க முடியும்.

பண வரவு சுமாராக இருக்கும். பணத்தை எவ்வாறு கையாள்வது என்று புரிந்து கொண்டு சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

அற்ப விஷயங்களுக்காக சிறிது குழப்பமடைவீர்கல்.




உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீண்ட கால திட்டம் சிறந்தது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும். சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். பணியிடத்தில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் உங்கள் படைப்பாற்றல் அதிகரிக்கும்.

இன்று நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணைக்கு மகிழ்ச்சி கிடைக்கும். உங்கள் இருவரிடையே அன்பு அதிகரிக்கும்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் கையில் உள்ள பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று மிகச் சிறப்பான நாள். உங்கள் அனைத்து முயற்சிகளும் இன்று வெற்றி அடையும். உங்கள எண்ணங்களில் அமைதி வேண்டும்.

உங்கள் பணிகளை அனைவரும் பாராட்டுவார்கள். உங்கள் சக பணியாளர்களுக்கு நீங்கள் எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை வளர்க்க முடியும். இதனால் உறவை வலுப்படுத்த முடியும்.

பணபுழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பும் கணிசமாக உயரும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




தற்போதைய நிலையிலிருந்து நீங்கள் முன்னேற நீங்கள் அதிகமாக முயல வேண்டும். இதன் மூலம் பாதுகாப்பின்மை உணர்வு அகலும். உற்சாகமாக இருக்க முயலுங்கள்.


நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். பணிகளை ஒப்படைக்கும் முன் தவறுகள் உள்ளதா என்று சரி பார்க்க வேண்டும்.

உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பாக இருக்க வேண்டும். இதனால் நல்லுறவை வளர்க்க இயலும்.

சில கடன்களை அடைக்க வேண்டியிருக்கும். அதனை உடனே செய்வதன் மூலம் பண இழப்பை தடுக்க முடியும். பணத்தைச் சிறப்பாக நிர்வகிக்க வேண்டியது அவசியம்.

இன்று தொண்டை வலிக்கான வாய்ப்பு உள்ளதால் குளிர்ந்த நீரைப் பருகுவதை தவிர்க்கவும். தலைவலியை தவிர்க்க அமைதியாக இருக்கவும்.

# நியூஸிலாந்தின் துணை பிரதமர் வின்ஸ்டன் நாட்டிற்கு வருகை



நியூஸிலாந்தின் துணை பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான வின்ஸ்டன் பீற்றர்ஸ் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

எதிர்வரும் 28ஆம் திகதி வரை அவர் நாட்டில் தங்கியிருப்பாரென வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரையும் நியூஸிலாந்தின் துணை பிரதமர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் வர்த்தகம், முதலீடு, விவசாயம், கல்வி, தொடர்பாடல், சுற்றுலா மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான இருதரப்பு கலந்துரையாடல்களிலும் நியூஸிலாந்து துணை பிரதமர் ஈடுபடவுள்ளார்.

நியூஸிலாந்து துணை பிரதமருடன் அந்நாட்டு வெளிவிவகார மற்றும் வர்த்தக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மூவரும் இந்த விஜயத்தில் கலந்து கொண்டுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

கடந்த 5 ஆண்டுகளில் நியூஸிலாந்தும் இலங்கையும் இருதரப்பு உறவை மேம்படுத்துவதில் கணிசமான பங்கை ஆற்றியுள்ளதாக நியூஸிலாந்து அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்து துணை பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான வின்ஸ்டன் பீற்றர்ஸின் இந்த விஜயமானது அரசியல் ரீதியில் முக்கியத்துவம் மிக்கதும் இருநாடுகளுக்கிடையிலான உறவின் மேம்பாட்டிற்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்குவதாக அமையுமெனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.